இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 07-06-2023

# ஒடிசா விபத்தும் தமிழ்நாடு அரசும் - 2

மாபெரும் விபத்து நடந்துள்ளது, இந்த நேரத்தில் ஒடிசா மாநில அரசுக்கு மீட்புப் பணிகளுக்கு உதவ வேண்டும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்டு இருந்தால் அவர்களை உடனடியாக மீட்டு அழைத்து வர வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் துடிதுடிப்பையே இவை அனைத்தும் காட்டுகிறது.

**ஹவுராவிலிருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் விரைவு இரயிலில் பயணம் செய்ய முன்பதிவு செய்த பயணிகளது பட்டியல் தென்னக இரயில்வேயிலிருந்து பெறப்பட்டு அதில் தமிழ்ப்பெயர் கொண்டவர்களையும், தமிழ்நாட்டில் இருப்பிட முகவரி அளித்துள்ள 127 நபர்களது பட்டியலை தமிழ்நாடு அரசு தயாரித்தது. தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள 127 நபர்களை மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து தொடர்பு கொள்ளப்பட்டதில், 119 நபர்கள் பாதுகாப்பாக உள்ளதாக தெரிய வந்துள்ளது. எஞ்சிய 8 நபர்களது செல்பேசி மற்றும் முகவரி இல்லாததால் தேடுதல் தொடர்ந்தது. இந்த தகவல்களை வைத்து ஒடிசா சென்ற தமிழ்நாடு அரசு குழு ஆய்வுகளை மேற்கொண்டது.**

4 ஆம் தேதி அதிகாலை 4.30 மணியளவில் ஒடிசாவிலிருந்து சிறப்பு இரயில் மூலம் 137 பயணிகள் சென்னை வருகை தந்தனர். இவர்களை இரயில் நிலையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட உயரதிகாரிகள் வரவேற்றார்கள். வருகை தந்த பயணிகளுக்கு காலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. இவர்களில் 36 பயணிகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 34 பயணிகள் இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அனுப்பி வைக்கப்பட்ட இவர்களில் 3 பயணிகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற பயணிகள் சிறு சிகிச்சைக்குப் பிறகு அவர்களது இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஒடிசா மாநிலத்தில் இருந்து வருகிற பயணிகளுக்குத் தேவையான பரிசோதனை மற்றும் மேல் சிகிச்சை மேற்கொள்ள 30 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிக்கென அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் 7 பேருந்துகளும், காவல் துறை மூலம் 50 டாக்ஸிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன. கூடுதலாக 10 அவசரகால ஊர்திகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இரயில் நிலையத்தில் வீல் சேர், ஸ்டிரெச்சர் வசதி களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வருவாய்த் துறை, சுகாதாரத் துறை அலுவலர்கள், வருகின்ற பயணிகளுக்குத் தேவையான உதவிகள் செய்திட பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

4 ஆம் தேதி மாலையில்தான் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சிவசங்கர் ஆகியோர் சென்னை திரும்பினார்கள். **“நாங்கள் நேரடியாக சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று அருகில் இருக்கின்ற மருத்துவமனைக்கு சென்றிருந்தோம். அங்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் அனுமதிக்கப்படவில்லை. அதன் பிறகு உடல்கள் ஏதாவது வைக்கப் பட்டிருக்கிறதா என்று பிணவறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கேயும் நாங்கள் சென்று விசாரித்தோம். அங்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் வைக்கப் படவில்லை. அதன் பிறகு அங்கிருக்கக்கூடிய அரசு அதிகாரிகளுடன் ஆய்வு செய்தோம். தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் பாதிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் சொன்னார்கள். ஒடிசா அரசால் வைக்கப்பட்ட அழைப்பு மையத்துக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைக் காணவில்லை என்பது மாதிரியான அழைப்புகள் வரவில்லை என்பதையும் உறுதி செய்து கொண்டோம். 8 பேரை மட்டும் தொடர்பு கொள்ள முடியாமல் முதலில் இருந்தது. அதில் 2 பேர் பின்னர் தொடர்புக்கு வந்துவிட்டார்கள். ஜெகதீசன் என்பவரிடம் நாங்களே பேசிவிட்டோம். மற்ற ஆறு பேர் பயணித்த பெட்டி எண். D3, D4, D7, D9, S1, S2 ஆகியவற்றில் பயணித்தவர்களுக்கு பாதிப்பு எதுவும் கிடையாது. இது உடனிருந்த பயணிகள் கொடுத்திருக்கக்கூடிய செய்தி. நம்முடைய அரசு அதிகாரிகள் இன்னும் அங்குதான் தங்கியிருக்கிறார்கள்”**

-என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் அறிவித்தார்கள்.

உடனடியாக அவர்கள் இருவரும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து ஒடிசா நிலவரங்களை முழுமையாக விளக்கினார்கள்.

**“இரண்டு நாட்களாக அங்கே தங்கி இருந்து மருத்துவமனையில் பலியானோர் வைக்கப்பட்டிருந்த வளாகம் அனைத்தையும் பார்த்தோம். ஒடிசா அரசுடனும் முழுமையாக ஆலோசனை நடத்தினோம். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்ட தாக இதுவரை தகவல்கள் எதுவும் உறுதி செய்யப்படவில்லை. மாநிலக் கட்டுப்பாட்டு அறைக்கும் தங்களது உறவினரையோ நண்பர்களையோ தொடர்பு கொள்ள முடியவில்லை என யாரும் தகவல் தெரிவிக்கவில்லை”**

-என்று அமைச்சர்கள் இருவரும் முதலமைச்சர் அவர்களுக்கு விளக்கம் அளித்தார்கள்.

2 ஆம் தேதி இரவு முதல் 4 ஆம் தேதி மாலை வரையிலான 48 மணி நேரமும் முதலமைச்சர் அவர்கள், ஒடிசா நிலவரம் பற்றிய சிந்தனையிலேயே இருந்தார்கள். மக்களைக் காக்கும் அரசும், ஒரு முதலமைச்சரும் எப்படிச் செயல்பட வேண்டுமோ அப்படிச் செயல்பட்டார்கள். ஏதோ ஒடிசாவில்தானே நடந்தது என்று இருக்கவில்லை. தமிழ்நாட்டில் இப்படி ஒரு பாதிப்பு நடந்திருந்தால் எப்படிச் செயல்பட்டிருப்போமோ அப்படிச் செயல்பட்டார் முதலமைச்சர் அவர்கள். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்வுகளைக் கூட தள்ளி வைத்துவிட்டு ஒடிசா துயர் துடைப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார் முதலமைச்சர் அவர்கள். இதுவே மக்களாட்சியின் இலக்கணம் ஆகும். இதுவே முதலமைச்சரின் இலக்கணம் ஆகும்.

**பாதிக்கப்பட்டவர்களுக்காகத் துடிப்பதும், வேறொரு மாநிலமாகவே இருந்தாலும் வேற்றுமை பார்க்காமல் உதவுவதுமான அறநெறிகளுக்கு திராவிட மாடல் அரசு இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக தலைநிமிர்ந்து காட்சி அளிக்கிறது. ஆபத்து காலத்திலேயே அறநெறிகள் அடையாளம் காணப்படும் என்பதற்கு உதாரணமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.**

●●




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.6.2023) தலைமைச் செயலகத்தில், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் சந்தித்து, சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் தோட்டக்கலை துறைக்குச் சொந்தமான, 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான, 115 கிரவுண்ட் நிலம் சட்டப் போராட்டம் நடத்தி மீட்கப்பட்டதையொட்டி வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், நில நிருவாக ஆணையர் எஸ்.நாகராஜன் ஆகியோர் உள்ளனர்.

## என்ஜினீயரிங் கலந்தாய்வு ரேண்டம் எண் வெளியீடு!

சென்னை, ஜூன் 7 –

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் தமிழகத்தில் 460க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இங்கு இளநிலைப் படிப்புகளில் உள்ள சுமார் 1.5 லட்சம் இடங்கள் ஆண்டுதோறும் பொது கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. அதன்படி இந்த ஆண்டுக்கான பொறியியல் கலந்தாய்வுக்கான விண்ணப்பப் பதிவு கடந்த மாதம் 5ம் தேதி தொடங்கியது. என்ஜினியரிங் படிப்புக்கான விண்ணப்ப பதிவு ஜூன் 4ம் தேதியுடன் நிறைவ டைந்த நிலையில், இதுவரை மொத்தம் 2,29,167 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் 1,87,693 பேர் விண்ணப்ப கட்டணம் செலுத்தியுள்ளனர். அவர்களில் 1,55,124 பேர் சான்றிதழ்களை முழுமையாக பதிவேற்றியுள்ளனர். இந்த மாணவர்களுக்கான தரவரிசை முடிவு செய்யும் வகையில் ரேண்டம் எண் நேற்று வெளியிடப்பட்டது. ஒரே மாதிரியாக கட் ஆஃப் பெறும் மாணவர்களில் யாருக்கு முன்னுரிமை அளிப்பது என்பது ரேண்டம் எண் மூலம் முடிவு செய்யப்படும்.

**சான்றிதழ் சரிபார்ப்பு!**

ரேண்டமில் பெரிய எண் பெற்ற மாணவர்களுக்கு தரவரிசையில் முன்னுரிமை வழங்கப்படும். மாணவர்களின் சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் இணைய வழியில் வருகிற 20ம் தேதி தொடங்குகிறது. இந்த ஆண்டுக்கான என்ஜினீயரிங் கலந்தாய்வு ஆன்லைன் வழியாக அடுத்த மாதம் 2ம் தேதி தொடங்க உள்ளது.

சிறப்பு பிரிவுக்கான கலந்தாய்வு ஜூலை 2 முதல் 5ம் தேதி வரையும், பொதுப்பிரிவு கலந்தாய்வு ஜூலை 7ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 24ம் தேதி வரை நடைபெறுகிறது.

மாணவர்கள் ரேண்டம் எண் மற்றும் கூடுதல் விவரங்களை www.tneaonline.org மற்றும் tndte.gov.in ஆகிய இணைய தளங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.6.2023) முகாம் அலுவலகத்தில், மூத்த வழக்கறிஞரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வில்சன் சந்தித்து, சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் தோட்டக்கலை துறைக்கு சொந்தமான, 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான, 115 கிரவுண்ட் நிலம் சட்டப்போராட்டம் நடத்தி மீட்கப்பட்டதையொட்டி வாழ்த்துப் பெற்றார்.

முதல் கட்டமாக ரூ.125 கோடியில்

# 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன்.7-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் சென்னை, தேனாம்பேட்டை, விஜயராகவா சாலையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் நடைபெற்ற விழாவில் முதற்கட்டமாக தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 125 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48” போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறைவாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி (7.5.2022) அன்று சட்டப்பேரவை 110 விதியின் கீழ், தமிழ்நாடு மக்களின் சுகாதாரத் தேவைகளை மென்மேலும் மேம்படுத்திடும் விதத்தில் தமிழ்நாட்டில் கிராமப்புரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களை இருப்பதைப் போல நகர்ப்புறங்களில் மக்கள் அரசுப் பொது மருத்துவமனையை நோக்கி வரும்போது மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாகி வருகிறது. இந்நிலையை மாற்றி, ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் நோக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள் மற்றும் 63 நகராட்சிப் பகுதிகளில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி முதல்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 125 கோடி ரூபாய் செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஒவ்வொரு நகர்ப்புற நலவாழ்வு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு தூய்மைப் பணியாளர் என 500 மருத்துவர்கள், 500 செவிலியர்கள், 500 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 500 தூய்மைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் இம்மையம் செயல்படும். இந்நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம் இப்பகுதியில் வாழும் சுமார் 25 ஆயிரம் மக்கள் பயன்பெறுவர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம், மகப்பேறு நல சேவைகள், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை நல சேவைகள், வளர் இளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்பக் கட்டுப்பாடு சேவைகள், தொற்று நோய்களுக்கான சேவைகள், தொற்றா நோய்களுக்கான சேவைகள், கண், காது, மூக்கு, பல், வாய் மற்றும் தொண்டை நோய்களுக்கான சேவைகள், முதியோர் மற்றும் நோய் ஆதரவு நல சேவைகள், அவசர மருத்துவ சிகிச்சை சேவைகள், மனநல சேவைகள் மற்றும் யோகா போன்ற பல்வேறு நலவாழ்வு சேவைகள் நகர்ப்புற மக்கள் குறிப்பாக, குடிசைவாழ் மற்றும் நலிந்த மக்களுக்கு தரமான முறையில் மருத்துவ வசதி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் துணை மையங்களாக செயல்பட்டு அனைத்து அத்தியாவசியமான ஆரம்ப சுகாதார சேவைகளை மக்கள் எவ்வித பொருட்செலவின்றி அவர்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையிலேயே பெறுவதோடு அல்லாமல் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார தேவைகளுக்காக மக்கள் தேவையின்றி அணுகும் சூழ்நிலையையும் குறைக்கிறது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மரு. கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.